[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [*2019 பிப்ரவரி 12*

கொடைக்கானல் நகரில் 2007 முதல் அறிவிப்பு வழங்கப்பட்ட கட்டடங்கள் 1,415 உள்ளதாகவும், 45 கட்டடங்கள்மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இதனை விசாரித்த நீதிமன்றம் அனைத்து அனுமதியற்ற கட்டடங்கள்மீதும் உரிய முறையில் ஆய்வு செய்து, சட்டரீதியான முடிவுகள் மேற்கொண்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுத்து 11–3–2019 அன்று அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்டம் 1–2–2019–ல் நடந்த சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பொதுமக்களின் ஆட்சேபணைகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதி செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனவே, நீதிமன்றத்தில் அரசு அளித்த உறுதியின்படி மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு, Master Plan 6–3–2019*–க்குள் ஒப்புதல் அளிக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொடைக்கானல் நகர் மலை வாழிடமாக உள்ளதாலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், விதிமீறல்களை ஆராய்ந்து, மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த பின்னர் விதி மீறிய கட்டடங்களை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் மற்றும் துறைகளின் ஆலோசனை பெறப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில், முடிவெடுக்கப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சிலபல ஆலோசனைகளும் கருத்தில்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

(ஈ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈமச் சடங்கு நிதி முறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈமச் சடங்கு நிதி சரியாகப் போய்ச் சேரவில்லையென்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.

2019 பிப்ரவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ மதம் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரது இறுதிச் சடங்கு செலவிற்காக இறந்தோரின் குடும்பங்களுக்கு ரூ.2,500/– வழங்கப்படுகிறது. இதற்காக தமிழ்நாடு அரசு, ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்ட நிதி ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சிகளின் நிருவாக இயக்குநரகம், நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் சென்னை, மதுரை, ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாநகராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2018–2019 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 கோடி ரூபாயில் இதுவரை 4.67 கோடி ரூபாய் உதவித்தொகை 18,692 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈமச் சடங்கு நிதி முறையாக வழங்குவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார் வந்தால் அரசால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த ஈமச் சடங்கு நிதியை உரியவர்களுக்கு உரிய நேரத்தில் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் நான் கேட்டதற்கு இன்றைக்குப் பதில் சொன்னதற்கு நன்றி. ஆனால், நாங்கள் கிராமங்களுக்குப் போகிறபோது இதைத்தான் முதலில் சொல்கிறார்கள். நீங்கள் பணம் கொடுக்கிறீர்கள். ஆனால், போதவில்லை போலிருக்கிறது. இறப்பு அதிகமாகப் போய்விட்டது. இப்போது பனிக் காலம். நம்மாலேயே குளிர் தாங்க முடியவில்லை. கோட்டு போட்டுக் கொண்டு மாறுவேடத்தில் போக வேண்டியதாக இருக்கிறது. மாலை போன்றவை வாங்குவதற்கே இந்த நிதி போதவில்லை. (குறுக்கீடு) எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடு) நிறைய இறப்பு வருகிறது. ஆகவே, இதற்குக் கொஞ்சம் அதிகமான நிதியொதுக்கிக் கொடுத்தீர்களென்றால் போதும்.*

[2019 பிப்ரவரி 12

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 5 கோடி ரூபாயாகும். அதிலேயே மீதி இருக்கின்றது. 4.67 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. 18,692 நபர்கள் அதற்கு மனு செய்திருக்கிறார்கள்; இறந்தவர்களுக்கென விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதேனும் விடுபட்டிருந்தால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்களுக்கு உடனடியாக நிதியுதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: Practical *ஆக என்னவென்று கேட்டீர்களென்றால், இதுபோன்ற இறப்புகள் குறித்து அதிகாரிகளிடம் சென்று தெரிவிக்கின்றனர்.* VAO–*விடம் போய் சொல்வார்கள். அவர் 'அடப் போங்கப்பா' என்று சொல்வார். சிலர் அதிலும் கமிஷன் கேட்கிறார்கள். அதனால் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நினைப்பவர்களும்கூட, தெரிவிப்பதில்லை. இதுதான்* practical *ஆக நடக்கிறது. அதற்குப் பிறகு நீங்கள் சொல்வதெல்லாம் இருக்கின்றது. மொத்தத்தில், நீங்களும் கிராமத்துக்காரர், நானும் கிராமத்துக்காரர்தான். அதனால் என்ன நடக்கிறது என்பது தெரியும். அதைத்தான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது உள்ளாட்சித் துறை. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சிகள் நிருவாக இயக்குநரகம், நகராட்சி*

2019 பிப்ரவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நிருவாகம் மற்றும் மாநகராட்சிகளைச் சேர்ந்த அதிகாரிகள்தான், இந்த ஈமச் சடங்கு நிதியை அளிக்கின்றனர். ஆகவே, அதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், நீங்கள் சுட்டிக்காட்டினால், யாருக்காவது கிடைக்கப்பெறாமல் இருந்தால், அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. வரவு–செலவுத் திட்டம், 2019–2020, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

***முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நேற்றைக்கு விவாதம் நடைபெற்றபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள், தினமணி பத்திரிகையிலே வந்த செய்தியைப் படித்துக் காட்டினார். நடுநிலை பத்திரிகை, "இதிலே தேர்தல் கண்ணோட்டம் இல்லாமல் இந்தப் பட்ஜெட்டை தயார் செய்திருக்கிறார்கள்" என்று அதிலே வந்த செய்தியைச் சுட்டிக்காட்டிப் பேசினார். இன்று அதேபோல ஒரு நடுநிலை செய்தித்தாளில், எந்தக் கட்சி சார்பும் இல்லாத ஒரு செய்தித்தாளில், தினமலர் பத்திரிகை என்ற ஒரு பத்திரிகை, அந்தப் பத்திரிகையின் தலைப்பிலேயே 'பாழ்' என்று தலைப்பிட்டு, 'தேர்தலுக்காக இந்த 2,000 ரூபாயை அறிவித்திருக்கிறார்கள்; வாக்கை உயர்த்துவதற்காக அறிவித்திருக்கிறார்கள்' என்று உள்ளது. எங்களுடைய தளபதி அழகாக முதலிலேயே சொன்னார். எனக்குகூட, அப்போது புரியவில்லை. இந்த பட்ஜெட் ஒரு நிழல் பட்ஜெட். நிஜ பட்ஜெட் அல்ல என்று தீர்க்கதரிசனத்தோடு சொன்னார். எனக்கு அப்போதுகூட சரியாகப் புரியவில்லை. இப்போது, எதற்குச் சொன்னார் என்று* correct *ஆகத் தெரிகிறது. நிதியமைச்சர் வாசித்தது நிழல் பட்ஜெட். முதலமைச்சர் விதி 110–ல் சொல்வது நிஜ பட்ஜெட். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நிழலுக்கும், நிஜத்துக்கும் உள்ள வித்தியாசம். அதுதான் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த பட்ஜெட்டிலேயே அந்த 2,000 ரூபாயைச் சொல்லியிருக்கலாம். அதை விட்டு விட்டு, இன்றைக்கு முதலமைச்சர் சொல்கிறார், பாருங்கள்.*